## ஸ்ரீமது இராமலிங்க சுவாமிகளுடைய சீவகாருணிய போதனைகள்.

———::———

இராமலிங்க சுவாமிகள் என்பார் ஒருவர் இத்தென்னாட்டின்கண் இருந்
தமை தமிழர் யாவர்க்கும் நன்குதெரிந்த தொன்றேயாம். ஸ்ரீமது இராம
லிங்கசுவாமிகள் தென்ஆற்காடு ஜில்லாவில் சிதம்பரத்திற்கு அணித்தாகிய
திருமனூரில் இப்பொழுதைக்குத் தொண்ணூறுவருடங்களுக்கு முன் பிறந்
தனர். அவர் தமது இளமைப்பருவத்திலேயே கல்வியில் தேர்ந்து, அறி
வும் நற்குணமும், நல்லொழுக்கமு முடையவராய் விளங்கினர். அதைக்
கண்டவர், கேட்டவர் அனைவருமவரை மிகப் பாராட்டினர். அவர் தமது
ஒன்பதாம் பிராயந்தொடங்கியே பாட்டுகள் இயற்றத் தொடங்கினர் என்று
கூறப்படுகின்றது. அவர் இயற்றிய செந்தமிழ்ப்பாக்களெல்லாம சொற்
சுவை, பொருட்சுவை, அலங்காரமென்பன அமையப்பெற்றிருப்பதுடன்
காதிற்குமிக்க இன்பம் பயப்பனவாயும், உள்ளத்தைப்பெரிது முருக்குகின்ற
னவாயு மிருக்கின்றன. இதுபற்றியே, அப்பாக்களை அநேகர். பலசமயங்க
ளிலும் பாடியும் கேட்டும் மகிழ்கின்றனர். இக்காரணத்தினால் கற்றவர்க
ளுக்கும், மற்றவர்களுக்கும் சுவாமிகளிடத்துப்பெரிதும் அன்புண்டாயிற்று.
அவர் இயற்றிய இன்னிசைச் செந்தமிழ்ப் பாக்கள் அனைத்தும ஒருங்குசேர்க்
கப்பட்டு, ஆறுதிருமுறைகளாக வகுக்கப்பட்டு, 'திருவருட்பா' என்றபெய
ரால் அச்சிடப்பட்டிருக்கின்றன. சுவாமிகள் சீவகாருணியம முதலியவற்றை
விளக்குஞ் • சில எளிய வசனநூல்களும் செய்தனர். அவர் தமது தமய
னார், தமக்கையார் முதலிய உறவினர் வேண்டுகோளிற்கும், கட்டுப்பாட்டிற்
கு மிணங்கி மணஞ்செய்து கொண்டாராயினும, உலகத்தில் எல்லாம்
நிலையாமையை உடையனவென்றும் துன்பந்தரற்பாலன வென்றுங்உயிர்
வாழ்க்கையே துக்கமயமானதென்றும் நினைந்து, தத்துவவிஷயங்களை ஆரா
ய்வதிலேயே தன்மனத்தைச் செலுத்தி, அவ்வில்லறமார்க்கத்தில் எவ்வகைப்
பற்றும் சிறிதுமின்றி வாழ்ந்து வந்தனர். அவர் தத்துவ ஆராய்ச்சியில்
இருந்ததேயன்றி, பலர்க்குக் கல்வி கற்பித்தும், நல்லறிவு புகட்டியும், அன்பு
அருள் முதலிய அரியபெரிய அறவிஷயங்களைக்குறித்து உபந்நியாசங்கள்
புரிந்தும் அவர்களை நல்வழிப்படுத்தி வந்ததாகவும் அறியப்படுகின்றது.
அவர் வடலூரில் சமரசசன்மார்க்க சங்கமொன்றும், ஒருதரும சாலையுந்
தாபித்தனர். அச்சுவாமிகள் ஐம்பத்தொரு பிராயம் வாழ்ந்திருந்தனர்.
ற்க.

இராமலிங்க சுவாமிகளுடைய இனியபாட்டுகளில் இளமை, தேகம்
பொருள் முதலியவற்றின் நிலையாமை, கடவுள் பெருமை, ஆன்மஇலக்கணம்
உலகத்தோற்ற வொடுக்கம், கடவுளுக்குஞ் சேதன அசேதன உலகத்திற்கு
முள்ள கலப்புநிலை, இருவினை, மறுபிறப்பு, இன்பதுன்பம், முத்திப்
றுபே என்பவைகளைக் குறித்தவிஷயங்களும் போதிக்கப்பட்டுள்ளன.

சுவாமிகள் கடவுளுக்குஞ் சீவர்களுக்கும் உள்ளகலப்பு. சீவனுக்குஞ் சீவனுக்குமுள்ள இயைபு, கடவுளுக்கும் உலத்திற்கு முள்ள சமமந்தம் நல்வினை தீவினை, மறுபிறவி, இன்பதுன்பம் மோக்ஷநிலை அந்நிலையினை அடையுவழிகள் முதலியவற்றைக்குறித்தும்எடுத்துக் கூறியவிஷயங்களெல்லாம் ஒரோவொரு சார்மதஸ்தர்களுக்கே உடன்பாடாகவும் ஏனைப்பிற மதஸதர்களுக்குச் சமமதமில்லாதனவாகவும், வாதம் விளைக்கற்பாலனவாகவும, எல்லா மக்களுடைய இந்திரிய அனுபவத்திற்கு வாராதவைகளாகவுமிருத்தலின், அவற்றை விடுத்து யான் என்னுடைய இவ்வசனப் பிரபந்தத்திற்கு அச்சுவாமிகளுடைய பொதுவான சீவகாருணிய போதனைகளை மட்டு மெடுத்துக்கொண்டேன்.

அருமைச் சகோதரர்களே முற்காலத்தில் சீவகாருணிய நல்லொழுக்கத்தை விரித்துப்போதித்தவர்கள், வட நாட்டில் இருந்த கௌதம புத்தரும் தென்னாட்டிலிருந்த திருவள்ளுவனருமாவர். பிற்காலத்தில் அச் சீவகாருணிய அறவொழுக்கத்தைத் தேற்றிப் போதித்தவர்ஸ்ரீ இராமலிங்கப் பெருந்தகையாரே.இக்காலததில் அப்பெருந்தகையாரையன்றி வேறுயாரும் உலகத்தார் எல்லார்க்குஞ் சீவகாருணியம விளைவிப்பான் வேண்டி முயன்றிலர்.

அப்பரோபகார குணசீலர் சீவகாருணியமொன்றே அறங்கள்எல்லாவற்றுள்ளுசிறந்ததெனறும், அதன்கண் ஏனைய அறங்களெல்லாம் அடங்குமென்றும் அது எல்லாச்சாதியார்க்கும், எல்லாக்குலத்தார்க்கும, எல்லாக்கூட்டத்தார்க்கும, எல்லாதேசத்தார்க்கும், இன்றியமையாத தொன்றென்றும் வலியுறுத்துவா ராயினர்.

சீவகாருணிய வொழுக்கமென்பது சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக இருக்கவேண்டிய மன உருக்கமாகுமெனறு அப்பேரறிவானர் எடுத்துரைத்தனர்.

சீவர்களாகிய நமக்கு ஏனையச்சீவர்கள் விஷயமாக மனஉருக்கமெப்போது இருத்தல்வேண்டுமென்று நீங்கள் கேட்பின்; "சில சீவர்கள் பசி தாகம், பிணி, பயம் கொலை முதலியவைகளால் துன்பமடையபாரகண்டபோதும்கேட்டபோதும் இவைகளால் அவைகளுக்குத்துன்ப முண்டாகும்என்றநாமுணர்ந்தபோதும் மனஉருக்கமுண்டாதல் வேண்டும் என்று அவ்விராமலிங்க அடிகளார் கூறினர்.

ஆம். துன்பப்படும் மற்றையச் சீவர்களிடத்து நமக்குக் காருணியம் வேண்டியதற்குக் காரணமென்னை? நம்முடைய காருணியத்தைத்துன்பமனுவிக்கும் மற்றைச்சீவர்கள் பெறுவதற்கு அவைகளுக்கு என்னஉரிமை இருக்கிறது? எனறு நீங்கள் வினவுவீர்களேல்:—நமக்குத்துன்பம்வருங்காலத்

துநாம் எவ்வாறுகலங்குகின்றோம்? அவ்வாறே பிறசீவர்கள் துன்பமடையும்போது கலங்குமல்லவா? நமக்கு உயிர் எப்படியோ அப்படியே எல்லாப் பிராணிகளுக்குமிருக்குமன்றோ ஆகவே, நாம் துன்பப்படும் பிறசீவர்கள்பால் கருணைகாட்டக் கடமைப்பட்டவர்களாகின்றோம. எனறும் எல்லாச்சீவர்களும் சுகதுக்கங்களை ஒவ்வோர் அளவிற்கு உணர்கின்றன; உயிர்வாழ மிக வருந்திமன்றாடுகின்றன; மரணத்தைக்கண்டு அஞ்சுகின்றன; ஆகவே துனபமடையும் சீவர்,கள் அங்ஙனம் துனபமடையாத நம்முடைய காருணியத்தைப் பெறுவதற்கு உரிமை உடையவைகளாய் இருக்கின்றன என்றும், இது ஒழுக்கநூலறிவுடையோர் யாவர்க்கும் சம்மதமென்றும் இராமலிங்கப் பெருமான் செப்பிற்று

அப்பெருமான் சீவகாருணியமில்லாத கடின சித்தர்களை நோக்கிச் சீவகாருணிம்யஉலகத்திற்கு இன்றியமையாதது எனறும், எல்லாவிதங்களானும்சுகநிலையில் இருப்பவர் இதுபோது பிறருடைய கருணையை வேண்டாராயினு மனனோர் பினனர் ஒருகால் அச்சுகநிலை நீங்கப் பெற்றுத் துனபம் அடையும்போது பிறருடைய காருணிய உதைவியத் தேடுவர் என்றும், அத்தருணத்தில் பிறர் கருணையின்றி யிருந்த அவர்மாட்டுக் கருணையடைந்து உதவிசெய்யமறுப்பரேல், அவர் பெரிதும் வருந்தப்பெறுவர் என்றும், ஆகவே இப்பொழுது எல்லா ஆற்றலும், எல்லா இன்பமுமுடைய நாம் துனபமடையுஞ்சீவர்களுக்குக் கருணையோடு உதவி செய்யின் நமக்கு ஒருகால் துன்பம் நேரிடினும் அப்போது பிறமனிதர் கருணைகாட்டிய நம்மிடத்துக் கருணைகொண்டு உதவிபுரிவர் எனறும்விளங்க அறிவுறுத்தருள்வாராயினர். ஆகவே,எனக்கினிய சகோதரர்களே பிறசீவர்களிடத்துத் தயவுகாட்டாது கடினசித்தர்களாக இருப்பது தக்கதன்று.

இராமலிங்கவள்ளலார் சீவகாருணிய ஒழுக்கத்தை அபரசீவகாருணியமென்றும், பரசீவகாருணியமென்றும் இரண்டாகப்பிரித்துக் கொள்வாராயினர். அபரசீவகாருணியம் என்பது சீவர்களுக்குத் தாகம், பிணி, இச்சை எளிமை, பயம் முதலியவைகளால் துன்பம் வந்த காலத்து அதைப் போக்கலாம். சீவர்களுக்குப் பசி, கொடுமை, கொலை என்பவைகளால் நேரும் துன்பத்தை நிவர்த்திசெய்தலே பரசீவகாருணியம் எனப்படும்.

சுவாமிகள் அபரசீவகாருணியத்தைப்பற்றிப் போதிக்க எடுத்துக்கொண்டபோது, நீர் வேட்கையால் வருந்துபவர்களுக்கு நீர் வார்த்தல் வேண்டும் என்றும், பிணியினல் வருந்தும் எழைகளுக்கு மருந்து தருதல் வேண்டுமென்றும், உடுப்பதற்கு ஆடையின்றி வருந்தும் ஏழைகளுக்கு ஆடைதருதல் வேண்டுமென்றும், இருப்பதற்கு இடமின்றி வருந்தும் எளியோர்களுக்கு இடம்வகுத்துக்கொடுக்கவேண்டுமென்றும், மனோபயத்தினல் வருந்

பவர்களைத் தேற்றுதல் வேண்டுமென்றுங் காட்டுவோராயினர். மற்றுப் பர சீவகாருணியத்தையே இராமலிங்கசுவாமிகள் தம்முடைய நூல்களில் பல இடங்களில் நன்குவிரித்து உரை நிகழ்த்தினர்கள். "பசியினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும், கொலையினால்வரும் அவத்தைகளுந் துன்பங்களும், தம்முள்ளொத்திருக்கின்றனவாதலால், பசியினால்வரும் துன்பத்தையும், கொலையினால்வருந் துன்பத்தையும், நிவர்த்திசெய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கிய லக்ஷியமென்றுமறியவேண்டும்." என்று அவர்கள் சன்மார்க்கவிளக்கமென்னுந் தம்முடைய அரியவசனநூலின்கண் எழுதுவாராயினமை காண்க.

பசியினாலுங் கொலையினாலும் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்யும் பர சீவகாருணியத்தையே அவர்கள் நன்கு விரித்தமைக்கு என்னையோ காரணமெனின்; சீவர்களுக்குப் பசியினாலுங் கொலையினாலும் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்ய நினைப்பவர்களுக்குச் சீவர்களுக்குத் தாகம், நோய், வறுமை, பயம் முதலியவைகளால் துன்பம் நேரிடுங்கால் அதை நீக்குவதற்கு தயவு உண்டாகாமலிராது ; ஆதலால் அச்சன்மார்க்கப் பெருந்தகையாளர் சீவர்களுக்கு நேரும் பசித் துன்பத்தையும், கொலைத்துன்பத்தையும் நிவர்த்திசெய்தல் வேண்டுமென்பதைப்பற்றியே தம்நூல்களில் ஆங்காங்கு இனிது விரித்து உரைப்பாராயினர்.

சுவாமிகள் ஏழைமனிதர்களுக்குப் பசிவருங்காலத்தில் அவர்கள் அடையும் பலதுன்பங்களைச் சீவகாருணியவிளக்கமென்னுந் தம் நூலின்கண் வாசிப்போர் கேட்போர் உள்ளங்கரையக் கரைய | எழுதுவாராயிற்று.

அப்பசி ஆகாரத்தினாலன்றி, வேறு வகையாய் ஒழியாதாகையால், பசியினால் வாட்டமுற்று அலைந்து வந்த ஏழைகள் எந்தச் சாதியாராயினும் எந்தக்குலத்தாராயினும், எத்தச்சமயத்தாராயினும், எந்தத்தேசத்தாராயினும் அவர்களிடத்து யாதொரு வேறுபாடுங்கருதாமல் அவர்களுக்கு அன்னம், இட்டு அவர்கள் பசித் துன்பத்தை ஆற்றி அவர்களை சந்தோஷிப்பிக்குமாறு இராமலிங்கப்பிரபு போதித்தனர்.

உண்மையில் பசித்தழலினால் வருந்திவந்து இரந்தாருக்குச் சோறு இடுதற்கு ஒருவர்க்குத் தம் வறுமையினால் இயலாவிடினும் அப்பசியுற்றோர் விஷயத்தில் மிகவுந் தயவுடையவராகி, அவர் பசியை மற்றொருவரைக்கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்கமுயற்சி எடுத்துக்கொள்ளல் வேண்டுமென்றும், அல்லது செல்வர்பால் சென்று சோற்றை இரந்துவந்தாயினும் அவர்க்குக்கொடுத்திடுதல் வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர்.

தேகவலியின்றிச் சோறு இரந்து உண்போரும் தம்மைப்போல் தேகவலி

யற்ற பிறர்க்கு இட்டுண்ணலே வேண்டும் என்பாராயினர் சுவாமிகள்.

பசியினால் வருந்துன்பத்தை ஆகாரத்தால் நிவர்த்திசெய்கிற சீவகாருணிய தருமத்தை வலியுறுத்தவந்த பெருமான் திருவருட்பா என்னும் தம் அரும்பெரும் நூலில் ஓரிடத்தில்,

"கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோமென்பீர் கண்ணோடே
கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்பசியோடே
வந்தாரைப் பார்க்கவுநேரீர்" என்றும்
"கனிவோடு மிரப்போர்க் கீயாமை யொன்றையே யின்றுணை
யென்பீரெத்துணைகொள்கின்றீர்பித்துலகீரே" என்றும்
"வட்டிமேல் வட்டிகொள்மார்க்கத்தில் நின்றீர் வட்டியை
வளர்க்கின்ற மார்க்கத்தையறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத்தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள்ளிருந்தீர்
பட்டினிகிடப்பாரைப் பார்க்கவு நேரீர் பழங்கஞ்சியாயினும்
வழங்கவுநினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோற் கிளைத்தீர்
எத்துணைக்கொள்கின்றீர் பித்துலகீரே".

என்றும் யாவர் உள்ளமுங்கரைந்து உருகக் கூறினமையை அறிக. மற்றுப் பசு, எருது, எருமை ஆடு, குதிரை, நாய், பூனை முதலியமிருகங்களுக்கும் காக்கை, கருடன், கோழி, குருவிமுதலிய பறவைகளுக்கும் சத்துவஆகாரங்களைக் கொடுத்து அவற்றின் பசியாற்றுதல் அவசியமென்று மப்பெருந்தகையோர் தேற்றிப் போதிப்பாராயினர்.

நாம் நமது வாழ்க்கைக்கு உபயோகமாகுமாறு நம்முயற்சியால் நாமே விளைவிக்கின்ற கொடி, செடி, மரம், முதலிய தாவர உயிர்களும் பசியினால் வாடாதவண்ணம் அவைகளுக்கு முறையாக நீர்விடல்வேண்டுமென்றும் அப்பெருந்தயாநிதி எடுத்துக்காட்டினர்.

(தொடரும்)

உருத்திரகோடீசுவரன்

## அருவியன் கதை.

[அருவியன் என்பவன் ஒரு பெயர் பெற்ற கிரேக் யாழ் வல்லவன். அவனது மனைவி உருதேசி இறந்து போக அவள்மீதுள்ள காதல் மேலீட்டினால் அவன் புதுதனுலகு [இயமனுலகு] சென்று யாழ் வாசித்து அங்குள்ளாரைக் களிப்புறச் செய்ய புதுதன் உருதேசியை அருவியனுக்களித்து; அந்நாட்டெல்லை கடக்குமட்டும் அவளைத்திரும்பி நோக்குதல் கூடாதென்று கட்டளையிட்டனுப்பினான். அப்படியே அருவியன் முன்னும் உருதேசி பின்னுமாகத் தம் நாடுநோக்கி நடந்தனர். அருவியன் அவ்வெல்லையைக் கடந்தான். உருதேசி அந்நாட்டிலொரு காலும் தன் நாட்டிலொரு காலுமாய் நிற்கும் தருணத்தில் காதல் என்னும் கள்ளருந்திய அருவியன் மெய் மறந்து காதலியைத் திரும்பி நோக்க அவள் மீட்டும் புதுதனால் கொள்ளப்பட்டனள். அருவியன அடங்காத்துயரம் கொண்டு தன்னுடைய்தி ஆற்றினும் ஆருனுய்க்காதலியையெண்ணி நைந்து நைந்திருக்க அவனது காதல் பெருக்கைக் கண்ட திருசய நாட்டு மாதர் பொறாமையால் அவனைக்கொன்றனர் என்பது இந்தக் கிரேக் கதையின் வரலாறு].

### கலிவிருத்தம்.

துங்க மாங்கிரேக் கரின்தொல் காதைகள்
அங்கண் இங்கிலத்தார் அறிந் தின்புற
பொங்கும் இன்னிசை யாழ்வலோன் பொற்கதை
இங்கு முன்னர் இயம்பிடப் போந்தமால்.

### வேறு.

சிந்து வெண்டிரை யெனும் சேக்கை மேவலால்,
செந்திரு விளங்கலால், திசைகள் யாண்டினும்
பைந்தழை தருதலால், பச்சைமால் என
வந்தது திருசய வான நாடரோ. (1)

இலையிலாக் குன்றமும், இலையடர் தரு
தலையுலாம் தண்டமும், சருவிமா னொடு
கலையுலாம் சாரலும், கானயாறு பாய்
அலையுலாம் பொய்கையும் அழகு தந்தவே. (2)

அருவியின் குரவையே ஆன்ற குன்றெலாம்;
குருவியின் அரவமே குழையும் கொம்பெலாம்;
திருஅனர் சென்றுநீர் திளைக்கு வாவியும்
பொருவரும் மலர்த்தடப் பொலிவும் காட்டுமே. (3)

யோகம்தேர் மாந்தரும் உழல் மநத்தாய்
மோகவாய்ப் பட்டும்தம் முனிவு நீங்கினர்,

நாகலோகமும் அல, நண்ணலாத தாம்
போகபூமியை இதுபுரையும் ஆதலான். (4)

மேயசீர் நாட்டினோர் விளக்கம் அன்னதும்,
தூயவர் என்றதும், தொன்மை சான்றதும்,
தீயநல்குரவினைத் தெரிகிலாததும்
ஆயவூர் விருதை மேலளகை ஏய்க்குமே. (5)

அருவியன் என்றொரு நாமம் தாங்குவான்
ஒருவன் முற்காலையில் உளன் அவ்வூரிடை;
பொருவிலா யாழில்ஐம் பூதம் மாழ்குறப்
பெருமிசை தந்திடும் பெற்றி யான்அரோ. (6)

பண்தரும் யாழினைப் பருதி செய்துமேல்
அண்டரும் புகழ்வலோன் அருவியன் பரம்
கொண்டு தன் ஆசியும் கொடுத்தங் கேகினான்,
மண்டலந்தனில் நலம் மாந்தர் மாந்தவே. (7)

அந்தயாழ் அருவியன் தடவ மென்னொலி
தந்திட மைந்தரும் தையலார் களும்
சிந்தையும் செயலும்போய்த் திளைத்தல் மேயினர்
எந்த இன்பமும் ஒவ்வாஇன்ப வாரிதி. (8)

கலைபடர் மானினம் கலவி நீங்குமே,
வலைபடர் புள்ளினம் வருத்தம் ஆறுமே,
அலைபடர் வாவியுள் ஆய்கயலும் ஓர்
நிலைபடர் கின்றதன் இசை நெகிழ்ச்சியால். (9)

உள்ளமும் உயிரும் ஊர்காலும் ஓதநீர்
வெள்ளமும் ஓடுதல் விடுத்த கீதத்தால்;
கள்ளமும் வஞ்சமும் கரந்தனர் சிலர்
அள்உவர் நீங்கிப் பாலான ஆழிபோல். (10)

(வேறு)

கூட்டும் ஆசைக் குவலயத் தார்க்களி
ஊட்டு வாள்நகை ஒண்டொடி மாரெலாம்

நாட்டம் செய்ஒரு நாரியங் குண்டு; வான்
மாட்டம் தாரகை வாட்டும் மதியமே. (11)

ஓங்குங் கோளத் தெழில் ஒருங் கெய்தியே
தேங்கு நல்த்திரு வாழுரு தேசியை
பாங்குற அரு வியன்கைப் பற்றியே
தீங்கி லாகயம் சேர்ந்துவாழ் வெய்தினன். (12)

பூவினு மென்மை பூண்டஅப் பூங்கொடி
நாவினூறும் ரசமொழி நாடியே
ஆவல் கூர்ந்தரு வியன் அளியெனத்
தாவு வான்தலம் தன்னெளி காட்டியே. (13)

பழம தர்க்கணம் மானினி தன்பதி
பழமை துய்க்கப் பய்ந்தன ளோ? அல
நழுவு நாள்வளர் காளென வாரல் போல்
தழுவும் இன்பம் தனிச்சுவை மாறவே. (14)

தீங்கோர் எள்த் துணை யேனும் சிவணிடா
தோங்கும்இன்பமேஉற்றனர் தாம் எனில்
ஈங்கி ரண்டறமான வகுப்பினில்
தேங்கும் இல்லறமே பெரிதென்னி லென் ? (15)

நற்றுறவறம் நன்மையொன் றியிலோ
மற்றுளார்க்கோ? தன்மட்டோ? தன்மட்டுமே.
சொற்று மில்லறன் தோய்சுகன் அங்ஙனோ?
சுற்று ளார்க்கும்பின் தோன்றுப வர்க்குமே. (16)

ஓயும் சிரிடையாள் உரு தேசிதன்
நாயகன் ஒருநாள் பிரிந்தேயினும
காயும் நெற்றிகடியு மனத்தளாய்ப்
பாயும் துன்பப் பகழிபட் டோய்வளே. (17)

தனிமை சேர்பவர் தாரணி யில்பலோர்
இனிமை சேர்பவர் என்ன இயம்பினர்;

னிம கிழ்வுற நன்மணம் பூண்குடும்
பினிம ஞானன்பால் பேசி அறிமினே. (19)

புல்லும் அச்சம் புணைதரும் அன்பிவை
இல்லை ஆயின் இனிமையென் றுன்னலாம்.
சொல் இருகுணம் தோய்பவர்க்குத் தனி
கொல்லும் தீவிடம் தன்னில் கொடுமையே. (20)

அருவியன் அமுதாம் உருதேசி யிவ்
விருவரும் ஒருநாள் பிரிந்தெய் திலர்
"ஒருவினை யெனினும் அவர் ஒற்றுமை
திருவினை அஃதாக் கிடல்" சீர்த்தியே. (21)

இத்தகைய அப்பெண்மணி யோடு யாம்
உத்தமன் களித் தோரொரு சோலைவாய்
நித்தலும் விளையாடி நிறைந்த கம்
தத்தும் இன்பக்கடல் தவழ்ந்தா னரே (22)

K. N. சிவராஜபிள்ளை,

(தொடரும்)

# பேஹ்ராம்ஜி எம். மலபாரி.

இம்மகான் 1853—வது வருஷத்தில் பிறந்தார். இவர் பிதா பெரோடா அரசாங்கத்தில் 30-ரூபாய் சம்பளமுள்ள ஒரு குமஸ்தாவாயிருந்தார். மலபாரிக்கு 6—வயது ஆனதும் அவரது பிதா இறந்துபோக 27—வயதுடைய அவரது தாயார் சீமானான ஒரு கிழவனைத் தன்ஜாதிவழக்கப்படி இரண்டாவது மணந்துகொண்டாள். இந்தவிவாகத்தினால் மலபாரிக்கும் அவருடைய தாயாருக்கும் நேர்ந்த துன்பங்கள் பல. இயல்பாகவே குரூர குணமுடைய அந்தக் கிழவனுக்கு இந்தவிவாகத்துக்கப்பால் ஒருகப்பல் சேதமடையவும் அதனால் பெரும்பொருள் நஷ்டமாகவும் நேர்ந்ததனால் அந்தத் துர்ப்பாக்கியங்களுக்கெல்லாம் மலபாரியும் அவருடைய தாயாருமே காரணமென்றெண்ணி அவர்களைப் பலவாறு துன்பப்படுத்திவந்தான். "பட்டகாலிலே படும் கெட்டகுடியேகெடும்" என்றபடி மலபாரிக்கு ஏக துணையாயிருந்த தாயாரும் அவருடைய 12-வது பருவத்தில் இறந்துபட்டாள். இதுமுதல் மலபாரியின் துன்பங்கள் அதிகரித்தன. அவரது சிற்றப்பனுக்கு வறுமையினால் அவரைக்காப்பாற்ற முடியாதாகவே மலபாரிக்குத் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளவேண்டிய பொறுப்பு அவ்வளவு இளம்பருவத்திலேயே வந்தது. என்றாலும் மலபாரிகல்விஷயத்தில் அஜாக்கிரதையாயிருக்கவில்லை. காலை 7—மணிமுதல் 9—மணிவரையும் மாலை 6—முதல் 9—வரையும் சீமான்கள் விட்டுப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிவைத்துப் பொருள் தேடியும், பகல் 10—மணிமுதல் 4—மணிவரைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தும் காலத்தை வெகு கஷ்டத்தோடு போக்கினார். இவ்வாறாகப் படித்து, தாய்மொழியான குஜராத்தி பாஷையில் சமானியத் தேர்ச்சியடைந்தபின் ஒரு மிஷன்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆங்கிலங்கற்கத் தொடங்கினார். நமது மலபாரியின் நுட்பபுத்தியையும் விடாமுயற்சியையும் அறிந்தஅப்பள்ளிக்கூடப் போதகர்கள் அவருக்குப் பலவழியினும் உதவிபுரிந்து ஆங்கிலம் பயிற்றுவித்தனர். 15—வது வயது பூர்த்தியாகுமுன்னரே, ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய ஆங்கிலப்புலவர்களின் நூல்களில் அவர் மிகத் தேர்ச்சியடைந்தார். 15—வது வயது நிறைந்தவுடன் கலாசாலை வித்தியாப் பிபாசத்திற்காக பாம்பாக்குப் போனார்.

பம்பாயில் வந்தது முதல் அவருடைய வறுமைநோய் தணியத் தொடங்கிற்று. கணிதவிஷயத்தில் அவர்சிறிது மந்தமாயிருந்ததினால் பிரவேசப் பரீட்சையில் மூன்றுதடவை தோல்வியடைந்தார். எனினும் ஆங்கிலபாஷையில் அவர் அடைந்த பாண்டித்தியத்தினால் 2( ரூபாய் சம்பளத்தில் ஆங்குள்ள ஒரு பார்ஸி வித்தியாசாலையில் அவருக்கு ஒரு போதகர் உத்தியோகம் கிடைத்தது. அதுமுதல் அவருடைய வறுமை நீங்கத்தொடங்கினது. உத்தியோகம் பெற்ற சிலமாதங்களுக்கப்பால் அவருடைய மாதச் சம்பளம் 60—ரூபாய் ஆயிற்று. இந்தக்காலத்தில் அவர் அநேக குஜராத்திக் கவிகள் எழுதிவைத்திருந்தார். அக்கவிகளின் பெருமைகளை உணர்ந்த பம்பாய் ஸ்காட்டு மிஷன் கலாசாலைத் தலைவரான, டாக்டர் ஜாண் வில்சன் துரை, அவைகளைப் புத்தகரூபமாகப் பிரசுரிக்கும்படி தூண்ட, 1875 வயது வருஷத்தில் அதாவது அவருடைய 22-வதுவயதில் அப்பாவினங்களின் முதற்பகுதி வெளியாயிற்று. அது வெளியானதோடு அவருடைய பெருமையும் பெருகிற்று. இப்புத்தகப் பிரசுரத்தால் பெரும்புகழ் அவருக்குண்டானாலும் பொருள் வருவா யுண்டாகவில்லை. அக்கவிகளின் பெருமையைப் பற்றிய பேச்சும் பத்திரிகைகளின் மதிப்புரைத் தொனியும் அடங்குமுன் தானே அச்சுக்கூலி ரூபாய் 200--க்காக அவர் சிவில் கோர்ட்டுக் கழைகப் பட்டார். சிலருடைய உதவியால் அத்துன்பத்திலிருந்து விடுபட்டு மறு வருஷத்தில் சில ஆங்கிலக்கவிகளைப் பிரசுரஞ்செய்தார். இக்கவிகளை ஆங்கிலப்புலவர் சிரேஷ்டர்களான. லார்ட் டென்னிசன், மிஸ் ப்ளாரன்ஸ் நைற்றிங்கேல், லார்ட் ஷாப்ஸ்ட்பெரி ஜாண் ப்ரைற்று முதலியோருங்கூட வியந்து கொண்டாடினர் என்றால் அவைகளின் சிறப்பை எடுத்துரைக்கவும் வேண்டுமோ!

இதுமுதல் அவருடைய இறகுப் பிறப்பான விஷயங்களெல்லாம் அவருக்குப் பொருளளிப்ப தாயின, 1880-வது வருஷத்தில் அவர் பத்திராதிபராகவும் வேறொருவர் உடமஸ்தராகவும் இந்தியன் ஸ்பெக்டேற்றர் (Indian Spectator) என்னும் ஒரு ஆங்கிலப்பத்திரிகை பிரசுரிக்கப் பட்டது. அப்பத்திரிகை சிலமாதம் செவ்வையாய் நடைபெற்ற பின்னர் உடமஸ்தரின் திராணியின்மையால் நிற்கும்படி நேரிட அதனை மலபாரிதானே இரண்டரைப் பவுனுக்கு விலையாகப் பெற்றார். இப்பத்திரிகை இப்பொழுது ஒரு உயர்தா வாரப்பத்திரிகை, யாக பம்பாயில் நடைபெறுகின்றது. ஆனால் அதனைத் தற்காலத்திய நிலைமைக்குக் கொண்டுவர மலபாரி பட்டபாடு மிகவுண்டு. முதல்வருஷத்தில் கைப்

பொருளின்மையால் மலபாரிதானே பத்திராதிபராகவும், மனேஜராக வும் குமஸ்தாவாகவும் சேவகனுகவும் இருக்கும்படி நேர்ந்தது.

"மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்;
கருமமே கண்ணுயி னூர்."

என்றபடி மலபாரி யாவற்றையும் மறந்து பத்திரிகையை நன்னிலைமைக்குக் கொண்டு வருவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். இரவெல்லாம் விழித்திருந்து பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவாராம். பகல் முழுதும் பணப்பிரிவுக்காக தெருத்தெருவாய் நடப்பாராம். பத்திரிகை வெளியாகும் நாட்களில் ஜட்காவண்டியிலேறி வீடுவீடாய்ச் சென்று பத்திரிகையும் செலவு செய்வாராம். இவ்வாறுகக் கஷ்டப்பட்டு அப்பத்திரிகையைச் சிறப்பான நிலைமைக்குக் கொண்டுவந்த பின்னர் East and West என்ற ஒரு உயர்தர மாதாந்த ஆங்கிலப்பத்திரிகையும் பிரசுரித்தார். அதுவும் இப்பொழுது ஒரு சிறந்த பத்திரிகையாக விளங்குகிறது.

இவ்வண்ணம் உலகமதிப்பையடைந்து வருங் காலத்தில் சமுதாய பரிஷ்காரச் சார்பாக உழைக்கத் தொடங்கினூர். பால்யவிவாகத்தினுல் இந்துக்களடைந்து வரும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தி அதைத் தடுப்பதற்கான ஒரு சட்டமும் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தும்படிசெய்தார். இந்தச்சட்டமே அவருடைய சமுதாய பரிஷ்கார உழைப்புக்கு ஞாபகச்சின்னமாக இருக்கிறது.

அவர் இங்கிலாந்து பிரான்சு முதலிய தேசங்களையும் பலமுறை தரிசித்துள்ளார். ஒரு முறை இங்கிலாந்துக்குச் சென்றிருந்த பொழுது கிளாஸ்டன், ஹெர்பெர்ட்டு ஸ்பென்ஸர் முதலியமகான்களை சந்தித்து அவர்களால் பெரிதும் மதிக்கப்பெற்றுர்.

அவர் இயல்பாகவே அடக்கமான நடக்கையும் ஆடம்பரத்தில் வெறுப்புமுடையவர். பொதுக் கூட்டங்களுக்குப் போவதும் பிரசங்கங்கள் செய்வதும் அவருக்கு விருப்பமில்லாத வேலைகள். அவரடைந்த பெருமைக்கும் புகழுக்குங் காரணம் அவருடைய இறகின் வன்மையேயன்றி சொல்வன்மையல்ல. இறப்பதற்குச் சில வருஷங்களுக்கு

முன்னமேயே பொறுப்பான பத்திராசிரியத் தொழிலை விட்டு நீங்கிக் கொண்டார். 1912 ஜூலை 9—உ இளைப்பாறுதற் பொருட்டு சிம்லாவுக்குப் போனார். அங்கே அவருடைய சிநேகிதர்களோடு காலத்தை ஆநந்தமாகப் போக்கி வரவே, 11 உ காலையில் வழக்கப்படி உலாத்தி மாலைவரைப் பூரணசுகமாக விருந்த அவர் இராப்போஜனம் முடிந்தவுடன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும்பொழுது மூன்று முறை பெருமூச்சுவிட்டுத் திடீரென உயிர்துறந்தார்,

இந்தத் துக்க சமாரத்தினால் இந்துதேசம் முழுதும் உண்மையாகவே கலக்கம் அடைந்தது. அவருடைய புலாலுடம்பு மறைந்துபோனாலும், குஜாராத்தி பாஷையில் அவர் எழுதிய நூல்களும், ஆங்கிலச் செய்யுட்களும், பால்யவிவாகத்தை நிறுத்துவதற்காக அவர் மூலமுண்டான சட்டமும், இந்தியன் ஸ்பெக்றேற்றர், ஈஸ்டு அன்ற் வெஸ்று என்ற பத்திரிகைகளும் அவருக்கு அழிவில்லாப் புகழுடம்பை நல்கிட்டன. ஆதலின் அவர் இந்நிமிஷத்திலும் அறிவாளிகள் உள்ளத்தில் உயிரோடிருக்கின்றார்.

# குருட்டு யோகம்.

லக்ஷ்மிக்குக் கண் இல்லையாம். அவள்செல்லும் வழியில் நிற்போர் யாவரே ஆயினும் அவரிடம் சிறிது பொழுது செறிந்து வாழ்வளாம். பின்னும் செல்வளாம். ஒருபொழுதும் ஓரிடத்தும் நில்லாளாம். நிற்கின் உலகமும் நிற்குமன்றே.

ஆகவே இன்று வறியராய் இருப்போர் நாளைச் செல்வர் ஆவதும் இன்று செல்வராய் இருப்போர் நாளை வறியர் ஆவதும் உலக இயல்பே ஆகின்றது. யாரேனும் ஒருவன் திடீரெனச் சீமான் ஆயின் அவனுக்கு "குருட்டுயோகம் அடித்து விட்டது'' என்று நம்மவர் கூறிவியப்பதை அநேகர் கேட்டிருக்கலாம். ஆனால் யானடைந்த குருட்டு யோகம் வியப்பினும் வியப்பே! விந்தையினும் விந்தையே!

என்பெற்றோர் என் இளமையிலேயே இறந்து பட்டனர். என்னை வளர்த்தவர் யாவர் என இருபது பருவம் உடைய இப்பொழுதும் எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவுதான் ஆழ்ந்து நினைப்பினும் நான் ஐந்தாறு வயதுச்சிறுவனாய் இருந்தபொழுது வேறு சில சிறுவரோடு இரந்துண்டு வாழ்ந்த காலத்திற்கு அப்பால் என் சிந்தனை செல்கின்றதில்லை. பெற்றோர் பெயர் ஊர் நிலைமை முதலியனவற்றை அறிதற்பொருட்டு நான் செய்தமுயற்சிகள் பல. ஒன்றும் பயன்பட்டதில்லை. இறுதியில் சோர்வுற்று மறந்தேன்.

இரந்துண்பதே ஜீவியத்தொழிலாகக் கொண்டு, காலந்தள்ளத் துணிந்து நாள் ஒரு ஊராய் அலைந்துவரும் காலத்தில், ஒருநாள் மாலைப் பொழுது ஒரு ஏகாந்தமான வழியம்பலத்தை அடைந்தேன். அன்றைப் பகல் முழுதும் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. கையில் இருந்த கந்தைப்பையில் சேமித்து வைத்திருந்த உணவுப்பொருள்கள் எல்லாம் தீர்ந்தும் போயின. அம்பலமோ ஒரு சந்தியில் இருந்தது. அதன் நான்கு பக்கமும் நான்கு பாதைகள் பிரிந்து சென்றன. எவ்வழிசென்றால் விரைவில் ஏதேனும் ஒரு ஊரை அடையலாம் என்றறிய ஒரு வழியும் இல்லாதாயிற்று. யாரையேனும் கேட்டறியலாம் என்றாலோ அங்கு மனித சஞ்சாரமே இல்லை. என்ன செய்வது! " எல்லாம் ஈசன் செயல், கும்பிக்குக் கூழும் குடியிருக்க வீடும் உடுக்கத் துணியும் இல்லாத என்னை இதுகாறும் போற்றிய இறைவன் இன்று மட்டும் காவாது ஒழிவனோ? ஒருக்காலும் இல்லை! நம்பினோர்க்குத்

துன்பம் உண்டோ? எல்லாம் அவனது திருவிளையாட்டே! துன்பமே சுகத்துக்கு வித்து" எனத் துணிவு கொண்டு அம்பலத்தின் ஒருமூலையில் படுத்துக் கொண்டேன்.

கதிரவனும் மேல் திசை அடைந்தான். அந்தியும் வந்தது. கூடுநோக்கிச் செல்லும் பறவைகளின் ஒலி அன்றி வேற்றொலி எல்லாம் அவிந்தன. நடந்த அலுப்பால் நானும் கண் அயர்ந்தேன். ஏழைகளின் மனத்துயர்க்குநித்திரை ஒன்றே சிறந்த சஞ்சீவி. பூவணையும் பொற்பமைந்த மஞ்சமும் உடையாரை அவள் நாடாள். தரையே மஞ்சமாய் தன் கையே தலைஅணையாய் உடையாரை ஆர்வமுற்று அடைவாள். அவ்ளது திருஅருளே திருஅருள்.

எவ்வளவு நேரம் கண்வளர்ந்தேனோ யான் அறியேன். கண்விழித்ததும் அம்பலத்தின் நாற்பக்கமும் ஆள் சந்தடி கேட்டேன். ஆநந்தத்தோடு எழுந்தேன். என்அனைய ஆண்டிகள் பலரைக் கண்டேன். என் விருத்தாந்தங்களை அவர்களுக்கோத அவர் அன்புடன் அளித்த பழஞ்சோறுண்டு பசிதீர்ந்தேன். அம்பலத்தின் மேற்கே சுமார் 10—நாழிகைக்கு அப்பால் கைலாசபுரத்தில் பண்ணைக் கோமதியப்பபிள்ளை மகளுக்கு மறுநாள் கலியாணம் என்றும், அன்றுமுதல் 7—நாளைக்கு ஏழைகளுக்கு அன்னம் அளிப்பதாய்ப் பறை சாற்றி இருப்பதாகவும் அதன்பொருட்டே அவர்கள் செல்வதாகவும், அறிந்து, அவருடன் விடியற்காலம் பிரயாணம் ஆயினேன். வழி நெடுக நாங்கள் பாடின பாட்டுக்கும் காட்டின மகிழ்ச்சிக்கும் கணக்கில்லை. 8—மணிக்குள் கைலாச புரத்தை அடைந்தோம்.

கைலாசபுரம் உண்மையில் கைலாசமாகவே இருந்தது. ஆகாயத்தை அளாவிய பந்தல்கள் கட்டப் பட்டிருந்தன. அழகிய வர்ணப்பட்டுகளாலும் பல் நிறக்காயிதங்களாலும் மனோகரமான விதானங்கள் செய்யப்பட்டிருந்தன. வாழை கமுகு தோரணங்கள் முதலியனவற்றிற்குக் கையும் கணக்கும் இல்லை.

ஆண்டிகளுக்காக அவ்வூர் தெற்பக்குளத் தண்டை அமைக்கப்பட்டிருந்த விடுதியில் நாங்களும் சென்று தங்கினோம். நாழிகை 10—ஆனதும் பெரிய தலைவாழை இலை பரப்பி அறுசுவை உண்டி பரிமாறப்பட்டது .நாங்கள் தொந்தி புடைக்க உண்டு ஒவ்வொருவர் ஒவ்வொரு மூலை தேடிக் கண்வளரத்தொடங்கினோம். விடுதிக்குள் மூலை காலியில்லாமையால் தெற்பக்குளக்கரையில் நின்ற அரசமரத்தடியில் சென்று, கந்தைப்பையைத் தலைக்கு உய

ரம் வைத்துத் தலைசாய்த்தேன். அன்று வயிரார உண்பதற்குக் காரணமான திருமண விஷயமே பின்னர் என் மூளையில் இடம் பெற்றுக் கவிந்தது.

“ பண்ணையார் மகளைப் பாணிக்ரஷணம் செய்யும் பாக்கியம்பெற்ற புருஷனே திவ்ய புருஷன். நிலம் ஆயிரம் வேலியாம். தென்னந்தோப்புமட்டும் 10000—எக்கராம். மாந்தோப்புகளுக்கு மதிப்பில்லை. ஆடுமாடு முதலிய கால்நடைச் சொத்து ஒருபுறம். அம்மம்ம! இவ்வளவும் ஆள ஒரேமகள். அவளுக்கு வாய்த்த கணவன் அன்றோ கணவன். அவனைக் கண்டாலும் கலி தீரும். மாலை 3—மணிக்கு முகூர்த்தம். அந்தத் திவ்வியக் காட்சி காணத்தக்கதே. நான் எப்பாடு பட்டாவது காண்பேன். இன்றேல் இருகண்களைப் பெற்றும் பயன் என்ன? ” என இன்னவும் பிறவும் எண்ணி இருக்குங்கால் திடீரெனக் ‘ கொல் ’ என்றோர் ஒலி கிளம்பிற்று. எங்கணும் ஒரு பரபரப்பும் சச்சரவும் உண்டாயிற்று. பூமியே சிறிது குலுங்கினது போலாயிற்று. இருந்தவர் எழுந்தார்; எழுந்தவர் இருந்தார்; நின்றவர் ஓடினார்; ஓடினோர் நின்றார். சிலர் வயிற்றைப் பிசைந்து வாடினார். சிலர் கண்களைக் கசக்கிக் கலங்கினார். சிலர் வாய்விட்டரற்ற அஞ்சினார்.

இவ்வாறாக என் கண்ணில் பட்டோர் எல்லாம் ஏங்கித் தவித்து இரங்கி நிற்க, ஒரு கூட்டத்தார் பண்ணையார் வீட்டை நோக்கி ஓடக்கண்டு நானும் அவர்பின் சென்று காரணம் யாதென வினவ, ஐயோ! எவ்வாறு சொல்வது! பண்ணையார் மகளை மாலைசூட்டவந்த மணமகன் பாம்புதீண்டிப் பிணமாயினனாம்.

“ மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்து தன் கொழுநனைத்தழீஇ
உடுத்த ஆடை கோடி ஆக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

என்ற ராஜகவி உரை அவ்வளவும் உண்மை ஆயிற்றே என மனத்துள் எண்ணிக் கொண்டே பண்ணையார் வீட்டை அடைந்தேன். அவ்வூரில் உள்ள சில வயித்தியரெல்லாம் சிகிற்சை செய்தும் பயன் எள்துணையும் உண்டாயதில்லை. மந்திரவாதிகளின் தந்திரச் செயல்கள் எல்லாம் வீணாயின. பக்த சிரோங் மணிகளின் பஞ்சதந்திரங்களும் பாழாயின. மாப்பிள்ளை வீட்டார் மணமகனைப் பிண அணி அணிந்து மயானத்துக்கு எடுத்தேகினர். அன்று ஆங்கு கூடினோர் யாவரும் உயிர்ப்பிணமாய் நின்றனர். மணமகள் வீட்டாரும் வாடிநைந்தனர் என்று கூறவும் வேண்டுமா?

இத்தருணத்தில் அவ்வூர்க்கோவில் பூசாரி சந்நதம்கொண்டு, பண்ணையார் முன்சென்று "பக்தா! பயப்படவேண்டாம். பெண்ணோ மஹா பாக்யவதி. அவளுக்கு வாழ்க்கைத்துணைவனாக நீ தேடிக்கொண்டுவந்த மணமகனோ பூர்வ ஜென்மப்பயனால் அற்பாயுள் உடையவன். ஆதலால் விவாகம் ஆகும் முன்னரே உன் செல்விபால் இரக்கம்கொண்டு இவ்வாறு சம்பவிக்கச் செய்தேன். அவளுக்குரிய கணவனும் இப்பொழுது இங்கே வந்திருக்கின்றான். இதோ இந்த ஆத்திமாலையை வாங்கி ஸ்ரீ கல்யாணசுந்தரேசர் திருவடிகளைத் தியானித்து ஆகாயத்தில் வீசி எறிவையேல் அம்மாலை ஆண்டவன் திருவருளால் அப்புண்ணிய புருஷன் கழுத்தில் விழும். அவனை உன் மகளுக்கு மனமகிழ்ச்சியோடு மணாளனாக்கு. செல்வவதியாய் நீடூழி வாழ்வள்" என மிக ஆவேசத்தோடு மொழிந்து நின்றான்.

துன்பக்கடலில் ஆழ்ந்து கரைஏறும் வழி அறியாது தத்தளித்து நின்ற பண்ணையாருக்குப் பூசாரி மொழிகள் உயிரளிக்கும் புணை ஆயின. அன்னவரும் ஆத்திமாலையை அன்போடுவாங்கி, பரமன் திருவடியைப் பக்தியோடுசிந்தித்து ஆகாயத்தில் வீசிஎறிந்தார். ஆங்கு கூடிநின்ற ஜனங்களெல்லாம் மிக ஆவலோடும் வியப்போடும் மேல்நோக்கியவண்ணமாய் நின்றனர். என்ன ஆச்சரியம்! மேலே சென்ற திருவாத்திமாலை கந்தைப்பையும் கரித்துணி ஆடையுமாய் நின்ற என் கழுத்தில் விழுந்தது. கனவிலும் நினையாத பாக்கியம் கைவரச்செய்த திருஅருளை வியக்க ஓர் உணர்ச்சி என் உள்ளத்தெழுமுன்னரே ஆங்கு நின்றோர் என்னைத்தூக்கி வெகு ஆகோஷத்தோடு பண்ணையார் மனையில் ஓர் அழகிய அறையில் கிடந்த மஞ்சத்து அமர்த்தினர். கரித்துணியும் கந்தைப்பையும் காற்றாய்ப்பறந்தன. என் விரிக்கின்றேன்? யானும் மணக்கோலம் கொண்டேன். மணியும் 1-30 ஆயிற்று. இன்னும் 90- நிமிஷநேரத்தில் யான் பண்ணையார் செல்வியின் நாயகன் ஆவேன். அம்மம்ம! அந்த எண்ணமே என்னை ஆநந்தமயம் ஆக்கிற்று. மழையில் நனைந்தும், வெயிலில் உலர்ந்தும் மரத்தடிபோல் இருந்த என் உடம்பு பொன்னினும் பொலிவுற்றுப் பூவினும் மேனியுற்று விளங்கிற்று. எதிரேநின்ற நிலைக்கண்ணாடியண்டை சென்று நின்றேன். சிவ! சிவ! என் உருவம் இவ்வளவு அழகுடையதோ என வியந்தேன். அறையில் நான்மட்டும் தனிமையாய் இருந்தபடியால் என் மனத் தோற்றங்களை உய்த்துணர்வோர் இல்லையென்ற மனவுறுதி எனக்குப் பெரிதும் துணையாய் நின்றது. ஆனந்த மேலீட்டினால் மெய்க்களைப்பதிகரிக்க, மஞ்சத்தமர்ந்து பஞ்சணையில் சாய்ந்து பற்பல சிந்தனைக்கு உள்ளாயினேன். பண்ணையார் புதல்வி பரம்பரைச் சீமான் மகள். நானோ இந்நேரம்வரை இரந்துண்ட ஆண்டி. பண்ணையார் பணத்தால் நான் எவ்வளவு பகட்டடைந்தாலும் என் பழங்கதை பழங்கதையாகவே என்னைச்சூழ்ந்து நிற்கும். என் மனைவி எக்காரணம்பற்றியேனும் நற்குலப்பெண்களோடு வாதாட நேருமாயின் அன்னோர் ஓகோ? ஆண்டியின் பெண்டாட்டிக்கும் ஒரு நாக்கோ! எனக்கேலி பண்ணக்கூடுமே. ஐயோ! என்பொருட்டு அச்செல்வி இகழ்ச்சியடைதல் கூடுமோ? இம்மணவினைக்கு உடன்படாது ஒழிவனேல் ஈசன் கட்டளை ஒருபுறம் நிற்கின்றது. அதனை மறுக்க யாராலாகும். யாவும் விதிப்படியன்றோ முடியும். ஆயர்குலத்துதித்த காளிதாசனும் அரசன் மகளை மணந்து கவிச்சக்ரவர்த்தி ஆகவில்லையா. ஆதலின் அவ்வழி அஞ்சுவது வீணே. மணம் முடித்தபின்னர் எவ்வாறு வாழ்வதென எண்ணித்துணிவதே ஏற்புடையது. பண்ணையார் அளவற்ற செல்வப்பெருக்கு உடையராம், நான் ஈசன் செயலால்வந்த

மாப்பிளையாதலின் என்பால் யாவற்றையும் ஒப்புவித்து ஒருக்கால் வானப்பிரஸ்தனுயினும் ஆவர். அங்ஙனம் ஆகுங்கால் நான் செய்யவேண்டுவதென்ன? என்னனைய ஆண்டிகளுக்கு ஓர் அன்னச்சத்திரம் கட்டுவிப்பேன். எத்தனை ஆயிரம்பேர் வரினும் இருந்துண்ணும்படி எந்தல்களும் இயற்றுவேன். ஆனால் அதிலும் ஓரிடையூறு இருக்கின்றது. உலகம் பழிப்புரையாடுவதில் பெரிதும் பித்துடையது. பூர்வவாசனையால் இங்ஙனம் செய்தான் என ஒருக்கால் இகழவும் கூடும். அதற்கஞ்சி வாளாஇருப்பின் "ஓகோ! இவன் என்ன படுபாவி நேற்றுவரை நம் கூட்டத்திருந்தவன் இன்று செல்வச்செருக்கால் நம்மை மறந்துவிட்டானே" என ஆண்டிகளும் முணுமுணுப்பார். ஐயோ! இருதலைக் கொள்ளி எறும்பானேனே? எவ்வாறுயினும் ஆகுக! உலகப்பழிப்புப் பெரிதன்று. தருமச்செயலே சிறந்தது. வழியம்பலத்தில் ஆண்டிகள் இக்கலியாண சமாசாரம் என்னைத்தெரிவிக்காதிருந்தால் எனக்கு இப்பதவி கிடைக்குமா? அவர்களால் வந்த பாக்கியமாதலின் அவர்களை மறப்பது ஒருசிறிதும் பொருத்தமன்று.

இனி மணமகள் தான் என்னை விருப்புடன் ஏற்றுக்கொள்வளோ? ஆகா! அதற்கென்ன தடை. சங்கீதத்துக்கு உருகாத பெண்கள் இல்லை. அண்ணுமலை ரெட்டியார் காவடிச்சிந்தில் இரண்டு பதங்களைப் பண்ணுேடு பாடி உருக்கிவிடுவேன். பெண்களுக்குக் கண்ணுக்குக்கினிய கணவன் மேல் ஆசை என்பார்கள். என் அழகுக்கும் குறை உளதோ? இன்னும் ஒருமுறை பார்க்கின்றேன் என்று கண்ணுடியண்டை செல்ல எழுந்திருக்கவும், தலையணையாய் இருந்த கந்தைப்பையை ஒரு நாய் உருட்டி உருட்டிக் கடித்து அதற்குள் இருந்த பற்படத்தையும் வடையையும் கவரத்துணிவதைக்கண்டேன். கண்களைத்துடைத்து எழுந்திருக்குமுன் நாய் பையைக் கௌவிக்கொண்டு ஓடிவிட்டது. நாற்பக்கமும் நோக்க என்னனைய ஆண்டிகள் கால்மாடு தலைமாடாய்க்கிடந்து தூங்குகின்றனர்; பெண்ணையும் கந்தைப்பையையும் பறிகொடுத்து கனவின் கூத்துகளை எண்ணி மூக்கின் மேல் கையுமாய் நின்றேன்.

---

## நம் பத்திரிகை.

செந்தமிழ்ச் செல்வர்காள்!

இந்நாளே நானெடுத்த ஜென்மம் ஈடேறிய நன்னுள். இதையெழுத இறகெடுக்கும்பொழுது நான் அடையும் மனமகிழ்ச்சி அநுபவித்தறியத்தக்கதேயன்றி விளக்கிக்காட்டும் தன்மையதன்று. பகீரதன் கங்கையைப்பெற்ற காலத்தும், ராபர்ட்டு புரூஸ் (Robert the Bruce) ஏழாவது முறை முயன்று வெற்றியடைந்தபொழுதும், என்ன தனைய இன்பம் அநுபவித்திருப்பரோ என்பது எனக்குச் சந்தேகமே. இதன் காரணம் யாதென வினவுவோர் கீழ்வரும் என் சரிதையைக் கருணை கூர்ந்து கவனிப்பார்களாக!

1083-ளு தை மீ நான் "தமிழனை"த் தொடங்கியதும், 6 மாத காலம் நடைபெற்ற பின்னர் அஃது நின்றதும், பின்னும் 1087 சித்திரைமுதல் "அமிர்தவசனி"க்குப் பத்திராதிடரானதும், அதன் முதல் வருஷமுடிவில் அதைவிட்டு நீங்கியதும், இந்நாட்டாரில் மிக்காரும் அறிவர். அவ்விரண்டு சம்பவங்களிலும் குற்றவாளி யானல்லவென்று என் மனச்சாட்சி அறியும். ஆனால் அக்குற்றங்களைப் பிறர் தலைமேலேற்ற நான் முயலவுமில்லை. எல்லா நன்முயற்சிகளுக்கும் இடையூறுண்டாதல் இயல்பென எண்ணிச் சாந்தமடைகிறேன். மேற்கூறிய சம்பவங்கள் மூலமாக நான் அடைந்த துன்பங்களே இப்பொழுது சுதந்திரமாக ஒரு பத்திரிகை தொடங்கும் நன்னிலைமையை எனக்களித்திருப்பதால் அத்துன்பங்களுக்காக நான் மனம் வருந்தவுமில்லை. பாபு கிரிஸ்தோதாஸ் பால், பைராம்ஜி, எம். மலபாரி, ஜி சுப்பிரமண்யய்யர், விஜயராகவாசாரியார், முதலிய இந்தியப் பத்திராதிபச் சிரேஷ்டர்களின் ஜீவித சரித்திரங்களை வாசிக்குங்கால், அத்தகைய துன்பங்களுக்காக இரங்கி நிற்பதும், முயற்சி குன்றுவதும் அறியாமையென்றும், "முயற்சி திருவினையாக்கும்" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து விடாதுழைப்பதே நமது கடமையென்றும், கற்றுக்கொள்ளலாம். தான் எடுத்துக்கொண்ட தொழிலில் முதன் முறைதானே வெற்றிபெறுவோர் தொகையும் மிக அபூர்வமே, மகான்களெல்லாம் அளவற்ற தோல்விகளும் துன்பங்களும் அடைந்தபின்னரே தமது தொழிலில் வெற்றிபெற்றும் இருக்கின்றனர். அவர்கள் மட்டில் மெய்யான விதி என்மட்டில் பொய்த்துவிடுமோ? அம்மகான்களுக்கு இருள் நீக்கி ஒளியளித்த சூரியனே எனக்கும் ஒளிதருகின்றான். அவர்களுக்கு உயிர்க்குரம் நல்கிய இளங்காற்றே எனக்கும் உரமளிக்கின்றது. அவர்களை நாடகமாட்டுவித்த திருவருளே என்னையும் ஆட்டுவிக்கின்றது. என்னின் நான்மட்டும் என் தொழிலில் வெற்றிபெறு தொழிவேனோ?

இவ்வாறு மனவுறுதிபெற்றுப் பின்னும் ஒரு பத்திரிகை தொடங்குவதற்கான முயற்சிகள் பல செய்துகொண்டிருக்குங்காலத்து, கானாடுகாத்தான் ஸ்ரீமாந் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் M. R. A. S. பாளயங்கோட்டை சைவசபைக்கும் வடக்கன்குளம் கத்தோலிக் கிறிஸ்தவர் வித்யாசாலைக்கும் பொருளுதவி ஆதரித்த சமாசாரத்தைப் பத்திரிகை வாயிலாய் அறிந்து அச்சிமானுக்குக் கீழேவரும் விண்ணப்பப் பத்தையும் எனது சரிதையை விளக்கும் ஒரு கடிதத்தையும் சமர்ப்பித்தேன்.

## விண்ணப்பப்பட்டு.

சீர்பெறுசெந் தமிழ்மொழியும் செப்புசைவத் திருமதமும் செழிப்புற்
றோங்கப்
பேர்பெறுபொன் மழைபொழியும் பெருமுகிலே! பெத்தாச்சிப் பெரும!
சூழும்
நீர்பெறுமா நிலமிசையென் நெஞ்சிலுறு வெப்பமெலாம் நீக்குவா யென்
றேர்பெறுபூங் கழலிணைகள் எய்தினேன்; என்குறைகள் இயம்பக்
கேண்மோ! (1)

அரசமொழி மலையாளம் அதனாலும், ஆங்கிலங்கற் போர்க்கே உந்திக்
கிரசவுண வெளிதின்லபித் திடலாலும், இந்நாட்டார்க் கெங்ஙனே ஓர்
நிரசம்நம தருந்தமிழ்பால் நிலைபெற்ற படியாலும், நினையொப் பாரை
வரிசையுற வஞ்சிபெருக் குறையாலும், வான்தமிழும் வாடிற்
றீண்டே! (2)

கண்ணுதலான் ஆய்ந்ததமிழ், கடல்குடித்த குறுமுனிவன் கரைகாண்
டற்காய்
ஒண்ணுதலான் வள்ளிபங்கன் உதவியது வேட்டதமிழ், உயர் ஆரூரன்
பண்ணதனால் பரன்பணியும் கொண்டதமிழ், பாவேந்தர் பதியாம்
கம்பர்க்
கண்ணலரி யாசனப்பே றளித்ததமிழ், அடைந்தகதி அறைதற்பாற்
றோ? (3)

எத்தலத்தும் தாய்மொழியை இசைபெறச்செய் அருந்தவமே எற்
மென்னும்
உத்தமக்கோன் உடையேனாய் உள்ளவர்பால் இரந்துபொருள் பெற்றே
மூன்று
புத்தகமும் பிரசுரித்தேன், பூதலத்தே பெற்றஜென்மப்பேறு கொள்
வான்
நித்தியமாம் பெயர்நிறுவ நினைவுகொண்டேன், நினையடைந்தேன், நிலை
கண்டேனே (4)

உத்தமர்மேற் றிசையாரும், ஒரிருநான் காண்டின்முனம் உவகோர்
மெச்ச
சத்தியுறு ருஷியர்தமை சமர்தொலைத்து ஜெயம்படைத்த ஜெப்பான்
யாரும்
புத்திபெறும் சீனரும்நீள் புகழ்படைப்பான் பெருந்துணையாய் நின்ற
அந்தப்
பத்திரிகை எனும்பஞ்சாட் சரப்பெருமை பயனறிவாய்! பகர்வ
தென்னே! (5)

உலகர்குறை தீர்ப்பானும், உலத்துய்மை தருவானும், உணர்தற் கொண்ணு
நிலைபதவி சேர்ப்பானும், நீள்சடையோன் ஐந்தெழுத்தே நிமித்தமாயின்
அலகில்புகழ் தமிழுலகுக் களிப்பானும், அடைதலரும் அணிமா வாதி
தலைபெறெட்டுத் தனிநிதியம் தருவானும், பத்திரிகை தனின் வேறுண் டோ? (6)

பணமிலார்க் கிவ்வுலகம் இலையெனினும் பன்னாளும் பரிந்து செய்யின்
மணமுறூஉம் முயற்சி, என மனமகிழ்ந்தேன், மன்னவ! என் மனத்துள் ஆசை
குணம்பெறவோ கோடிநிதி அதுவேண்டா, கூறுபவுன் பத்தே போதும்;
வணங்கினேன், மாதார்தப் பத்திரிகை வழங்கவொரு வழிகாட் டாயே! (7)

ஆண்டுமுப்ப தேகின, என் ஆயுளரை போயதவம், ஐயோ! நெஞ்சம்
பூண்டஅவாப் பொலிவடையாப் புழுக்கமனம் உடையேனைப் புகழ் கொள்ளேனாய்
மாண்டொழிவ தழகாமோ? மாண்பிறவிப் பயனிதுவோ? வசையின் றாமோ?
ஆண்டகையே! அகங்கனிவுற் றளித்தி! இந்தச் சிறுபொருளை அளித்தி டாயே! (8)

கூத்தினுக்கும் வழக்கினுக்கும் கொடியிடையார் குலுக்கினுக்கும் கொடுங்கட் பேய்க்கும்
பாத்திரமில் அறப்பணிகள் பலவினுக்கும் பரிந்துநிதி அளிப்போர் மல்கும்
தாத்திரியில் தனிக்குமண வள்ளலெனத் தமிழுலகம் தலைநாள் செய்த
தோத்திரநற் பயனுருவில் தோன்றினாய்! என்னலவித் துன்றி னாயே! (9)

இனிப்பகர்வான் எதுமிலை, எந்தாய்! என் மனக்குறைகள் யாவும் விண் டேன்,
கனிச்சுவை கற்பகவலியைக் கழலிணைகள் காணவிட்டேன், கன்னன் பின்னும்
பனிக்கரத்த! பசும்பொன்மனம் பரிந்தெளியேன் பரிசுறக்கண் பாராய்! பார்மேல்
தனிக்குமரன் திருத்தாதை தன்னருளால் தழைத்தூழி வாழ்கு வாயே! (1 )

இதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து கீழ்வரும் கடிதம் எனக்குக் கிடைத்தது.

அன்புள்ள ஐய!

தங்கள் 22-8-13— உயுள்ள கடிதம் வரவடைந்தேன். தாங்கள் விரும்புவதுபோல அந்நாட்டில் தமிழ் மக்களுக்கென ஒரு தனித்தமிழ்ப் பத்திரிகை பிரசுரிக்கப் பெறுதல் அத்தியாவசியமே. அதற்கெனத் தாங்கள் கோரியவாறு மாதம் ஒன்றுக்குப் பவுன் 2 வீதம் அடுத்த செப்டம்பர் மாதம் முதல் 5 மாதங்களுக்கு அனுப்புகிறேன்.

இதைப் பார்த்தவுடன் நானடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. கடிதத்தின்படியே செப்டம்பர் 6-உ பவுன் 2-ம் வரப்பெற்றேன். இதுவே நமது "தமிழனது" புநர்ஜென்மத்துக்குக் காரணம். இந்தப் பவுன் பத்தும் பெருந்தகை வள்ளலாகிய ஸ்ரீமாந் செட்டியாரவர்கள் கைநலத்தால் ஒன்று பத்தாய்ப்பெருகி, தமிழனுக்கு நீடித்த வாழ்வளிக்கச் சக்தியுடையதாகு மென்பதற்கு முற்குறிகளும் தோன்றிவிட்டன. திருவனந்தபுரம் டிவிஷன் சிரஸ்ததார் ஸ்ரீமாந் P. அநந்தப்பெருமாள்பிள்ளையவர்களும், ஆலப்புழை ஸ்ரீமாந் பி. குமாரசுவாமிபிள்ளையவர்களும் ஒவ்வொரு பவுன் அளிப்பதாய் வாக்களித்திருக்கின்றனர். பத்திரிகையை ஆதரிப்பதற்குப் போதுமான சந்தாதார்கள் இருந்தும் கைம்முதலில்லாக் குறையினாலேயே என் எண்ணம் இதுகாறும் முற்று பெறாதிருந்தது, ஈசனருளால் அக்குறைபாடும் நீங்கிற்று.

எனது தாதாவாகிய ஸ்ரீமாந் செட்டியாரவர்களைப்போல் தமிழுலகத்திலுள்ள பிரபுக்களெல்லாம் என்மீது சிறிது கருணை கூர்வார்களாயின் இப்பத்திரிகை பலவழியானும் சிறப்படையக் காரணமாகும்.

நெடுநாளாக நான்கொண்டிருந்த எண்ணம் முற்றுப்பெற்று என் வாழ்நாள் வெற்றியடையக் காரணபூதரான பெருந்தகையாளன்—வள்ளல்பெருமான்—புலவர்காவலன்—புருஷகேஸரி—ஸர்வஸ்ரீமாந் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்களும் சுற்றத்தாரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும்பெற்று நீடூழிவாழவும் திருவிதாங்கோட்டில் தமிழ்மொழி சிறப்புற்றோங்கவும், தமிழுலகம் பலவகையானும் பொலிவுற்று விளங்கவும், புலவர் பெருமக்களெல்லாம் புகழ்பெற்றுத் திகழவும், திருவருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களாற் போற்றி "தமிழன்" இரண்டாவது தொகுதி முதற்பகுதியாகிய இச்சஞ்சிகையைத் தமிழுலகத்தார் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றேன்.

S. முத்துஸ்வாமிப்பிள்ளை

மாட்சிமைதங்கிய ஸ்ரீ மூலபெருமான் திருநாள் வாழ்த்து-

இன்றுமலை நாடெங்கும் இன்புறுவர். என்கோவே!
நின் திருநாள் கொண்டாடி நின் குடிகள், —என்றும்
திருமால் அருள்புரிய சீர்த்திமிகுந் தோங்கப்
பெரும! நினதருமைப் பேர்,

இன்னம்நீ நீடு இசையுடன் வாழ்ந்திடவே
மன்னுபுகழ் மன்னவா நின் குடைக்கீழ்—பன்னாள்
திருவாழுங் கோடு செழித்தோங்க மென்மேல்
தருப்போல் தழைக்க அறம்!

வஞ்சிநன் னாடாநின் வம்சம் வளர்ந்திடவே
கஞ்சிரன் போலக் கதிர்வீசி—மஞ்சுபடி
மாமலைசூழ் நாட்டில் மழைபொழிய என்றுமுன்னைக்
காமாரி காத்தருள வே.

K. G. சேஷய்யர். B· A; B. L. M. R. A. S.

தருவிளங்கிய விண்ணிடந்திண்ணறத் தகைசான்
றுருவிளங்கிய முத்தமிழ்நாடு மோர் நாடாய்,
அருவிளங்கிய செவ்வியுற் றெவ்வமொன்றறியாத்
திருவிளங்கிய நாடரோ சேரர் நன்னாடே.

இந்நலத்ததோர் நாடரசாளு நம்மிறைவன்
னென்னலைக்கு மேவின்றெனச்சீர்மை நேடுதலால்
தொன்னலம் பெறு மன்குலக் கொழுந்தெனத் துலங்கும்
பன்னலம் படைத் தமைதியின் வாழ்கபல் லாண்டே.

T, லெக்ஷ்மணபிள்ளை B. A,

நிலமண்டில ஆசிரியப்பா.

சோமனை வாழ்த்துதுஞ் சோமனை வாழ்த்துதுங்
காமனும் பொதியைவாழ் கலையமா முனிவனு
விரிநிலஞ்சுமக்கு மோர் மிளிர்மணிச் சேடனும்
தருமனு மொருங்காச் சமைந்தன ரோவென
வுருவொடு பலகலை யொடுநெடு மதியொடு
பொறையொடு வளர்ந்துயர் பொன்மல் கனந்தையி
லைம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மும்டருந் தெளியுமைந் துறுதிச் சுற்றமு
நடைநெறி யகலா நாற்பெருஞ் சேனையு.
முடையவ னாகி யுலகெலாம் புரக்கு

மாலிலனு பிராம வன்மரா ஜேந்திரன்
மூலநாட் பிறந்த வம் முறைநிகழ் கொல்ல
மாயிரத் தெண்பத் தொன்பதா மாண்டு
மாயிருங் கன்னி மதிவருந் திருநா
ளிருபதாந் தெய்தியி லிசைகுவ துணர்ந்தீ
திறம்பூ திறம்பூ தென்றுலாக் காண்பான்
வன்னவெண் குடைகளு மன்னவன் முகமுமா
மன்னியு மடங்கா மாண்புகழ் விரிப்ப
விரும்பினேன் போலும் விளங்கு மத்தினத்தவ
னருந்திர வாரமா வார்ந்தவற் புதத்தே.

வீ சு. பழனிக்குமாருப் பண்டாரம்.

எங்குநிறை பொருளாயவையினு மேற்பொருளாய்த்
தங்குந் தனிப்பொருளின் றண்ணருளால்—திங்கமிக
விண்ணிலங்கித் தண்சுடர்செய் வெண்டிங்கள்போல்வஞ்சி
மண்ணிலங்கி வாழ்கநம் மன்

வித்வான் ஜி. சுவாமிநாதன் ஆசாரி,

திருவாழுநாடு பலவுள்ளும் வாய்த்ததிலகமதாந்
திருவாழுங் கோட்டின்றலை நகராகுந்திருவனந்த
புரிவாழு மன்னன்கருணைநிறைமூல பூபதியை
மருவாழுந் தாரணைப் போற்றக் கடவுளைவாழ்த்துவமே.

எம். சங்கரநாராயணய்யர்.

வண்ணத் திருமாலெம் மாமூல மன்னவனைக்
கண்ணும் கருத்துமாய்க் காப்பான்காண்—மண்ணையிவன்
தாங்கக் கவலையின்றித் தண்ணாவின் மேற்சும்மாத்
தூங்கலா மென்னத் துணிந்து.

எஸ். தேசிகவிநாயகம்பிள்ளை.

அறிவு தழைக்க, அறம் பூக்க, செல்வச்
செறிவு கனியாகச் சேர—நெறியேதும்
கோணு துயர்ந்து குளிர்ந்த நிழல்தந்து
நாணாளும் எம்மை இனிகாத்து—வாணாட்
குரியன யாவு முதவு மாமூலப்
பெரிய அரசினைப் பேணி—விரியுமிவ்
வஞ்சி நாடென்றும் வளர்ப்பான், கருணைநீர்
மஞ்சுபோற் பெய்து திரு மால்.

பத்திராதிபர்.

அநேக தங்கமெடல்களும வெள்ளிமெடல்களும
பெற்ற டாக்ற்றா H. L. பட்லிவாலாவின்.
உலகப்பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலைசுரம், குளிர் சுரம் முதலிய
எவ்வகை சுரங்களுக்கும் கைகண்டமருந்து.
விலை ரூபா க.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து. விலை ரூ ங.

Tonic Pills:—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி
ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டுப
ண்ணும் குளிகைகள். விலை ரூபா கஇ.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ்
மருந்துகளாலும் செய்யப்பட்டது, வாய்நாற்றம்
பற்புழு பக்கட்டு முதலியவைகளைத் திட்டமா
ய்க் கண்டிக்கும். விலை அணா ச.
பெரிய பொட்டணம் அணா அ.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தானமருந்து
ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ச.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி
வி, பி, மூலம் பெற்றுக்கொள்ளலாம்,

Dr. H, L, Batliwalla's Co,
*Warli Labaratory*, Dadar, Bombay.

TO LET.

போஷகர் வரவு;

| | | |
|---|---|---|
| ஸ்ரீமான். R. P. குழந்தைசாமிப் பிள்ளையவர்கள் | ரூ | அ |
| B. A. L. T. L. C. P, M. R, A. S; | 4 | 0 |
| S. திரவியம் பிள்ளையவர்கள் | | |
| Retd. Anchal. Supdt. | 4 | 0 |

---

சந்தாவிவரம்.

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| போஷகர்களுக்கு | 4 | 0 | 0 |
| சந்தாதார்க்கு | 2 | 0 | 0 |
| பினங்கு. சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு. | 3 | 0 | 0 |
| தனிப்பிரதி | 0 | 4 | 0 |

குறிப்பு, முதல்மூன்று மாதங்களுக்குள்ஒருவருஷ சந்தா முன்னதாகச் செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும். 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒருபிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

(2) அடுத்தஜனவரி மாதம்முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit, S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.